தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 நவம்பர் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

** 389 வினா—திரு. என். கிட்டப்பா:* மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதனை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 1,532 கோடி ரூபாய்க்கான ஐந்தாண்டுத் திட்ட மொன்றை, தமிழ் நாடு அரசு 1973, ஆகஸ்டு திங்களில் மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பியது. இத் திட்டம் பற்றிய விவாதங்கள் 1973 ஆகஸ்ட் 30, 31 ஆம் தேதிகளில் மத்திய திட்டக்குழு, அமைச்சக அதிகாரிகள்—மாநில அதிகாரிகள் அளவில் நடந்தது. இதைத் தொடர்ந்து 1973 செப்டம்பர் 5 ஆம் தேதி மத்திய திட்டக்குழு துணைத் தலைவருடன் நான் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். இப்பேச்சு வார்த்தைகளின் பலனாக தமிழ் நாட்டின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு 1,149 கோடி ரூபாய் என மத்திய திட்டக்குழு தற்காலிகமாக நிர்ணயித்துள்ளது. இந்தத் திட்ட அளவு குறைவாக உள்ளதாலும், மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், திட்ட அளவை 1,200 கோடி ரூபாய் அளவில் உயர்த்த தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.